பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

25 03 2024 **MONDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்தின்போது அரசியல் கட்சிகள் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை தவிர்க்குமாறு தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.
2. விவசாயிகளின் நலனுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.
3. மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான அரசு பொறுப்பேற்றால் ஏழை குடும்பத்தை சேர்ந்த மகளிருக்கு ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று காங்கிரஸ் கூறியுள்ளது.
4. சிங்கப்பூர் உடனான நல்லுறவு தொடர்ந்து வலுவடைந்து வருவதாக இந்தியா தெரிவித்துள்ளது.
5. ஐ பி எல் கிரிக்கெட் இறுதிப்போட்டி சென்னையில் மே மாதம் 26-ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<u>இனி விரிவான செய்திகள்</u> ----

<<<<<<>>>>>

மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்தின்போது பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டினை அரசியல் கட்சிகள் தவிர்க்குமாறு தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

குறிப்பாக ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களை முழுமையாக தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

டிஜிட்டல் ஆவணங்கள் மற்றும் மின்சார வாகனங்களை பயன்படுத்துவதற்கு அரசியல் கட்சிகள் ஊக்கம் அளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் தேர்தல் பணிகளை மேற்கொள்ளும் நோக்கில் தேர்தல் ஆணையம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதற்கிடையே, முதல் கட்டமாக அடுத்த மாதம் 19-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 122 தொகுதிகளில் தேர்தல் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

பிஜேபி, காங்கிரஸ், இடதுசாரிகள் மற்றும் பல்வேறு கட்சிகளின் வேட்பாளர்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்து வருகின்றனர்.

காங்கிரஸ் சார்பில் ஆறாவது வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

ஐந்து பேர் கொண்ட இந்த பட்டியலின்படி, ராஜஸ்தானின் **Ajmar** தொகுதியில் திரு ராமச்சந்திரா சௌத்ரியும், தமிழகத்தில் உள்ள திருநெல்வேலி மக்களவைத் தொகுதியில் வழக்கறிஞர் திரு ராபர்ட் புரூஸும், மக்களவைத் தேர்தலோடு சேர்ந்து நடைபெறவுள்ள விளவங்கோடு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் டாக்டர் தாரகை **Cuthbert** போட்டியிடுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலத்தில் மக்களவைத் தேர்தல் ஒரே கட்டமாக மே மாதம் 7-ஆம் தேதி நடைபெறுகிறது.

மக்களவைத் தேர்தலோடு ஐந்து சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தலும் அன்றைய தினம் நடைபெறவுள்ளது.

இம்மாநிலத்தில் நான்கு கோடியே 94 லட்சத்திற்கும் மேற்பட்டோர் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

11 லட்சத்திற்கும் மேற்பட்ட முதல் முறை வாக்காளர்கள் தங்களது ஜனநாயக கடமையை ஆற்ற உள்ளதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

கர்நாடக மாநிலத்தை பொறுத்தவரை மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு இரண்டு கட்டங்களாக அடுத்த மாதம் 26-ஆம் தேதியும், மே மாதம் 7-ஆம் தேதியும் நடைபெறவுள்ளது.

வாக்காளர் பட்டியலில், ஐந்து கோடியே 42 லட்சம் பேர் இடம்பெற்றிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த மாநிலத்திலும் தேர்தல் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

மக்களவைத் தேர்தலின்போது 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையிலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நாடு முழுவதும் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, தமிழகத்தின் சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற முதல் முறை வாக்காளர்கள் இந்த தேர்தலில் வாக்களிப்பதை ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பதாக தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - வாக்காளர்கள் - 36 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

மத்தியில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு விவசாயிகளின் நலனுக்கு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத்திட்டத்தின்கீழ், 11 கோடி பேர் பயனடைந்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கும் நோக்கில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழாய் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்தின்மூலம் ஊரகப்பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கும் பாதுகாப்பான குடிநீர் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லைப்பகுதிகளில் இதுவரை இல்லாத அளவிற்கு கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டிருப்பதாகவும் பிஜேபி அதில் குறிப்பிட்டுள்ளது.

<<<<<<>>>>>

மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான அரசு பொறுப்பேற்றால் ஏழை குடும்பத்தை சேர்ந்த மகளிருக்கு ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், மத்திய அரசு பணியிடங்களில் மகளிருக்கு 50 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று கூறியுள்ளது.

பணிபுரியும் மகளிருக்கான விடுதி வசதி இரண்டு மடங்காக அதிகரிக்கப்படும் என்றும் காங்கிரஸ் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

கர்நாடகாவில் **KRPP** கட்சி பிஜேபியுடன் இணைந்துள்ளது.

இன்று பெங்களூருவில் அக்கட்சியின் தலைவர் திரு ஜனார்தன ரெட்டி, முன்னாள் முதலமைச்சர் திரு எடியூரப்பா தலைமையில் தமது கட்சியை இணைத்துக்கொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

சிங்கப்பூர் உடனான நல்லுறவு தொடர்ந்து வலுவடைந்து வருவதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

அரசு முறைப்பயணமாக சிங்கப்பூர் சென்றுள்ள அவர், அந்நாட்டு பிரதமர் **Lee Hsien Loong** –ஐ சந்தித்து பேசிய பின்னர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த சந்திப்பின்போது சர்வதேச விவகாரங்கள் குறித்து விவாதிக்கப்படடதாக அவர் தெரிவித்தார்.

முன்னதாக, அந்நாட்டு நிதியமைச்சருடனும் திரு ஜெய்சங்கர் ஆலோசனை நடத்தினார்.

சர்வதேச பொருளாதார சூழ்நிலை குறித்து இந்த சந்திப்பின்போது ஆலோசிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியா கூடுதல் பதக்கங்களை வெல்லும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு அனுராக் தாக்கூர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், விளையாட்டுத்துறையில் இந்தியா தொடர்ந்து சாதனை படைத்து வருவதாக கூறியுள்ளார்.

ஒலிம்பிக் போட்டிக்கான பயிற்சியில் வீரர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும், திரு அனுராக் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு நாளை தொடங்கவுள்ள நிலையில் மாணவர்கள் தேர்வுகளை தன்னம்பிக்கையுடன் அணு குமாறு மாநில ஆளுநர் திரு ஆர் என் ரவி கேட்டுக்கொண்டுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், தேர்வு மையங்களுக்கு முன்னதாகவே சென்று வினாத்தாள்களை கவனமாக படித்துவிட்டு எளிதான கேள்விகளுக்கு பதிலளிப்பதை முதலில் தொடங்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

சில கேள்விகள் சவாலாக தோன்றினால், பீதியடைய வேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு இந்த தருணத்தில் வழங்கும் ஆதரவு மற்றும் வழிகாட்டுதல் முக்கியமானது என்றும் திரு ஆர் என் ரவி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

காஸா பகுதியில் உடனடியாக சண்டை நிறுத்தத்தை வலியுறுத்த வகை செய்யும் வரைவு தீர்மானம் ஐ நா பாதுகாப்புக்குழுவில் இன்று வாக்கெடுப்பிற்காக கொண்டுவரப்படவுள்ளது.

புனித ரமலான் மாதத்தையொட்டி, உடனடியாக சண்டை நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்று அந்த தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா, சிக்கிம் மற்றும் மேற்கு வங்கத்திற்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் நாளை வரை மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஜம்மு காஷ்மீர், லடாக், இமாச்சலப்பிரதேதசம் மற்றும் உத்தராகண்டில் வெள்ளிக்கிழமை வரை மழை மற்றும் பனிப்பொழிவுக்கு வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வடமேற்கு பகுதிகளில் அடுத்த மூன்று தினங்களுக்கு வெயிலின் தாக்கம் அதிகரிக்கக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்திலும் அடுத்த ஐந்து தினங்களுக்கு வெப்பநிலை இயல்பைவிட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் - 34 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ பி எல் கிரிக்கெட் இறுதிப்போட்டி சென்னையில் மே மாதம் 26-ஆம் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இறுதிப்போட்டிக்கான முதலாவது தகுதிச்சுற்று ஆட்டம் மே மாதம் 21-ஆம் தேதியும், எலிமினேட்டர் சுற்று ஆட்டம் மே மாதம் 22-ஆம் தேதியும் அகமதாபாதில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்படடுள்ளது.

இறுதிப்போட்டிக்கான இரண்டாவது தகுதிச்சுற்று ஆட்டம் மே மாதம் 24-ஆம் தேதி சென்னையில் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

------------

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில், பெங்களூரு அணி - பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற பெங்களூரு அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

-----------------

போலந்து ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

<<<<<<END>>>>>